1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வேளாண்மை நில குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, பிரிவு வாரியாக சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 to 5 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move—

"The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 35 of 1972) be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

(ஈ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவுக்கு திருத்தங்கள் இன்னும் சர்குலேட் செய்யப்பட வில்லையென்று கருதுகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : It will be circulated shortly. Let us commence discussion.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய வருமான வரி மசோதா சம்பந்தமாக அரசாங்கமே சில அமென்ட்மெண்டுகளைக் கொடுப்பதாகத் தெரிகிறது. அந்த அமென்ட்மெண்டுகள் என்ன என்று தெரிந்தால், அதுபற்றிய விவாதங்களை எடுத்துச் சொல்லலாம். அமென்ட்மெண்ட் தெரியாமல் பொதுவாக, அதுபற்றி பேச முடியாது. ஆகவே, அமென்ட்மெண்ட் கொடுத்த பிறகு டிஸ்கஷன் செய்வது நல்லது.

அல்லது அமென்ட்மெண்ட்கள் இன்னின்ன லைனிலே இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மசோதாவை அடுத்து எடுத்துக் கொள்ளலாம். அடுத்த மசோதாவை இப்பொழுது எடுத்துக் கொள்வதற்கு பேரவையின் அனுமதி வேண்டியிருக்கிறது. ஆகவே, பேரவையின் அனுமதியுடன் அடுத்த மசோதாவை எடுத்துக் கொள்கிறேன்.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 38/72).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

(5) **அரசினர் சட்டமுன்வடிவுகள்**—தொடர்ச்சி.

(உ) கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 38/72).

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1972-ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபாதம் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட வரைவு * பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

இச்சட்டவரைவை முன் மொழிகையில், 1956-ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின் மூலம் (மத்தியச் சட்டம் 37/1956) முன்னுள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து இம்மாநிலத்திற்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில்

---

* 19—8—1972-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.